செய்தி வெளியீடு எண்: 178 நாள்: 25.02.2011.

**வழக்கறிஞர்கள் பேரவை உறுப்பினராக இருந்து, இறந்து போகும் வழக்கறிஞர்களின் குடும்பங்களுக்கு தற்போது வழங்கப்படும் 2 இலட்சம் ரூபாய் உதவித் தொகை 5 இலட்சம் ரூபாய் வரை உயர்த்தி வழங்கப்படும்**

**முதலமைச்சர் கலைஞர் ஆணை**

கழக அரசு பொறுப்பேற்ற பிறகு, தமிழ்நாடு வழக்கறிஞர்கள் நல நிதிச் சட்டத்தின் கீழ், வழக்கறிஞர்கள் நல நிதிக்கு தமிழக அரசின் ஒருமுறை மானியமாக 2 கோடி ரூபாய் நிதி வழங்கி ஏற்கனவே ஆணையிடப்பட்டுள்ளது. சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் டாக்டர் அம்பேத்கர் சிலை திறப்பு விழாவின்போது, இத்திட்டத்தின்கீழ் உறுப்பினராக இருந்து, இறந்து போகும் வழக்கறிஞர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை 2 இலட்சம் ரூபாயிலிருந்து, 5 இலட்சம் ரூபாய் வரை உயர்த்தி வழங்க வேண்டுமென்று சென்னை மற்றும் புதுச்சேரி வழக்கறிஞர்கள் பேரவை (Bar Council of Tamil Nadu and Puducherry) அளித்த கோரிக்கை ஏற்கப்படும் என்று முதலமைச்சர் கலைஞர் அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்பினை செயல்படுத்தும்முகத்தான், வழக்கறிஞர்களாக பணியாற்றி – வழக்கறிஞர்கள் பேரவையில் உறுப்பினராக இருந்து, இறந்து போகும் வழக்கறிஞர்களின் குடும்பங்களுக்கு தற்போது வழங்கப்படும் 2 இலட்சம் ரூபாய் உதவித் தொகையை, அவர்கள் பணிபுரிந்த ஆண்டுகளுக்கு ஏற்ப, 5 இலட்சம் ரூபாய் வரை உயர்த்தி வழங்கிட முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

இத்திட்டத்திற்காக வழக்கறிஞர்கள் நல நிதிக்கு ஆண்டொன்றுக்கு ஏற்படும் பற்றாக்குறையை ஈடுசெய்யும் தொகையோ அல்லது ஆண்டொன்றுக்கு 2 கோடியே 50 இலட்சம் ரூபாயோ – இதில் எது குறைவோ அத்தொகையை தமிழக அரசின் மானியமாக இந்நல நிதிக்கு வழங்கவும் முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

வெளியீடு: –

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.

* * * * *